# இதயத்தால் அறிய



# இதயத்தால் அறிய

சமர்ப்பணம்

இயேசுவின் கண்மணிகளுக்கு அர்ப்பணம்

அன்புடையீர்,

வணக்கம், நல்வாழ்த்துக்கள்.

“திருச்சபையை அறிவது இயேசுவை அறிவதாகும்.”
திருமறையின் கோட்பாடுகளையும், மரபின் ஒப்பற்ற செல்வங்களையும் எல்லாரும் புரிந்து கொள்ள விரும்பி, இச்சிற்றேட்டை மறைக்கல்வி ஆண்டிலே (2011 - 2012) வினா விடை முறையில் தொகுத்து தருவதில் மகிழ்கின்றோம். ஒப்பற்ற செல்வமாகிய இயேசுவை அறிய உதவட்டும்.
பிலி 3: 8 இத்தகைய இறையறிவுக்கு இதயாலயாவின் நல்வாழ்த்துக்கள்.

இக்கையேடு உருவாக உழைத்த இதயாலயா அருட்சகோதரிகளுக்கும், செல்வி.பவுலின் கிறிஸ்டி மற்றும் அருட்பணி அமிர்தராச சுந்தர் - பாளை மறைமாவட்டம், அருட்பணி அடைக்கல ராசா SDB அவர்களுக்கும் எமது நன்றியும், செபங்களும்.

என்றும் அன்புடன்,

அருட்சகோதரி *பெர்னார்டு லூர்துமேரி*
இதயாலயா, மேலபுத்தமங்கலம்,
திருநள்ளார் ரோடு, காரைக்கால் - 609 607
தொலைபேசி: 04368-236920, 9894256502
மெயில்: idhayalayafihm@gmail.com, asblourdoumary@gmail.com

# திருச்சபை

1. திருச்சபையின் முதல் மற்றும் இன்றைய திருத்தந்தை பெயர்களைக் குறிப்பிடுக?

   **விடை:** திருச்சபையின் முதல் திருத்தந்தை புனித பேதுரு, இன்றைய திருத்தந்தை 16–ஆம் பெனடிக்ட்.

2. திருச்சபை வரலாற்றில் எத்தனை சிலுவைப்போர்கள் நடந்துள்ளன?

   **விடை:** 8 சிலுவைப்போர்கள் நடந்துள்ளன.

3. முதல் வத்திக்கான் சங்கத்தின் மையப்பொருள் யாது?

   **விடை:** திருச்சபையில் திருத்தந்தையின் முதன்மை மற்றும் வழுவா வரம் ஆகியவற்றைப் பற்றியது.

4. 2ஆம் வத்திக்கான் பொது சங்கம் எப்போது யாரால் தொடங்கப்பட்டு, என்று முடிவடைந்தது?

   **விடை:** 2ஆம் வத்திக்கான் சங்கம் திருத்தந்தை 23ஆம் அருளப்பரால் 1962ஆம் ஆண்டு அக்டோபர் 11ஆம் நாள் துவங்கி திருத்தந்தை 6ஆம் சின்னப்பரால் 1965 ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் நாள் முடிவடைந்தது.

   * இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முக்கிய விவாதப்பொருள் யாது? **விடை:** உலகோடு உரையாடும் திருச்சபை

   * இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் சிறப்பு அம்சங்கள் யாவை? **விடை:** உலகமனைத்திலிருந்தும் ஆயர்கள் பங்கேற்றனர். முதன் முதலாக உலகமனைத்திலிருந்தும் மக்களின் குரல் ஒலித்தது. திருச்சபையின் எல்லா மரபுச் செயல்களின் தாக்கமும் உணரப்பட்டது.

5. மூவேளை செபம் சொல்லும் பழக்கம் எப்போது உருவானது?

   **விடை:** மூவேளை செபம் சொல்லும் பழக்கம் கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் உருவானது.

6. திருச்சபையின் முப்பெரும் பணிகள் யாவை?

   **விடை:** 1.போதிக்கும் பணி, 2. புனிதப்படுத்தும் பணி, 3. வழிநடத்தும் பணி

7. திருத்தந்தை 2ஆம் ஜான்பால் நற்கருணை ஆண்டை முன்னிட்டு வெளியிட்ட சுற்றுமடல் மற்றும் திருத்தூது மடல் யாவை?

**விடை:** அ. திருச்சபையும் நற்கருணையும் 2003 ஏப்ரல் 17

ஆ. ஆண்டவரே எங்களோடு தங்கும் 2004 அக்டோபர் 8

8. மறைக்கல்விப் பணியில் ஆயரின் பணி என்ன?

**விடை:** மறைக்கல்வி பயிற்சியை சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் முதியோர்களுக்கும் சிறந்த முறையில் தகுந்த கவனத்தோடு அளிக்க வேண்டும். (ஆ.ப.14)

9. ஆயர்களின் மறைக்கல்விப் பணி எதனை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்?

**விடை:** அ) விவிலியம், ஆ) திருச்சபையின் மரபு, இ) திருவழிபாடு, ஈ) திருச்சபையின் ஆசிரியம், உ) திருச்சபையின் வாழ்வு (ஆ.ப.14)

10. தந்தைக் கடவுள் பத்துக்கட்டளைகளை எங்கு யாரிடம் கொடுத்தார்?

**விடை:** சீனாய் மலையில், மோசேயிடம் கொடுத்தார்.

11. மோசே முதலில் பெற்றுக்கொண்ட பத்துக்கட்டளை பலகைகளுக்கும் 2–வது முறை பெற்றுக்கொண்ட பத்துக்கட்டளை பலகைகளுக்கும் உள்ள வேறுபாடு யாது?

**விடை:** முதல் பலகை தந்தைக் கடவுள் தானே பலகை செய்து தானே எழுதிக்கொடுத்தார். 2ஆவது பலகை மோசே செதுக்கி தந்தை கடவுள் சொல்ல மோசே எழுதினார்.

12. திருவழிபாட்டு ஆண்டின் தொடக்கமும் முடிவும் எது?

**விடை:** திருவழிபாட்டு ஆண்டின் துவக்கம் திருவருகைக் காலம் அதன் முடிவு பொதுக்காலத்தின் 34ஆம் வாரத்தின் சனிக்கிழமை (கிறிஸ்து அரசர் பெருவிழாவுக்குப் பின்வரும் சனிக்கிழமை)

13. திருவழிபாட்டு ஆண்டில் எத்தனை காலங்கள் உள்ளன?

**விடை:** ஐந்து அ) திருவருகைக் காலம் ஆ) கிறிஸ்து பிறப்பு காலம் இ) தவக்காலம் ஈ) பாஸ்கா காலம் உ) ஆண்டின் பொதுக்காலம்

14. நற்கருணை பேழையின் முன் விளக்கு எரிவதன் அடையாளம் என்ன?

**விடை:** இயேசுவின் உயிர் தரும் பிரசன்னத்தை உணர்த்தவும், அதன் வணக்கத்தின் அடையாளமாகவும் விளங்குகின்றது. (திச.624)

15. தமிழகத் திருச்சபையில் மொத்தம் எத்தனை உயர்மறை மாவட்டங்களும், மறைமாவட்டங்களும் உள்ளன?

**விடை:** மூன்று உயர் மறை மாவட்டங்களும், 14 மறை மாவட்டங்களும் உள்ளன.

16. கடன் திருநாட்கள் எவை?

**விடை:** அ) மரியன்னை விண்ணேற்றமான பெருவிழா
ஆ) கிறிஸ்து பிறப்பு விழா
இ) வருடத்தின் எல்லா ஞாயிற்றுக் கிழமைகள்

17. ஒரு சந்தி என்றால் என்ன?

**விடை:** ஒரு சந்தி நாளில் ஒரு வேளை உணவு மட்டுமே உட்கொள்வதைக் குறிக்கும்.

18. சுத்தபோசனம், ஒருசந்தி அனுசரிக்க வேண்டிய நாட்கள் யாவை?

**விடை:** சுத்தபோசனம், :– விபூதி புதன், தவக்காலத்தின் எல்லா வெள்ளிக்கிழமைகள்
ஒருசந்தி:– விபூதி புதன், பெரிய வெள்ளி.

19. திருச்சபைக்குத் தலைவர் யார்?

**விடை:** இயேசு கிறிஸ்து. அவர் பெயரால் திருச்சபையை வழிநடத்துவதற்காக கண்கண்ட தலைவராக புனித பேதுருவை ஏற்படுத்தினார். அவரைத் தொடர்ந்து வருகின்ற திருத்தந்தையர்களே திருச்சபைக்குத் தலைவர்கள்.

20. புனித பேதுருவுக்கு வாரிசாக வருபவர்கள் யாவர்?

**விடை:** திருத்தந்தையர்கள்

21. அப்போஸ்தலர்களின் வாரிசுகள் யாவர்?

**விடை:** ஆயர்கள்

22. திருச்சபை உலகில் ஆற்றும் பணிகள் யாவை?

**விடை:** மீட்பின் நற்செய்தியை அறிவிக்கின்றது
மக்களைப் புனிதப்படுத்துகிறது
மக்களை வழிநடத்துகிறது

23. திருச்சபையின் உறுப்பினர்கள் என்ற வகையில் நமக்குள்ள கடமைகள் யாவை?

**விடை:** கிறிஸ்துவின் போதனைப்படி வாழ்வது,
திருச்சபையின் பணியில் பங்கேற்பது

24. பெந்தகோஸ்து என்பதன் பொருள் என்ன?

**விடை:** 50–ஆம் நாள்

25. பாஸ்கா என்ற சொல்லின் பொருள் என்ன?

**விடை:** கடத்தல் என்பது பொருள்

26. ஆண்டவரின் நாள் எது?

**விடை:** ஞாயிற்றுக்கிழமை

27. திருச்சபையின் சிறப்பு பண்புகள் யாவை?

**விடை:** ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்.

ஏகம் – ஒருமை
பரிசுத்தம் – புனிதம்
கத்தோலிக்கம் – பொதுமை
அப்போஸ்தலிக்கம் – திருத்தூதர்களின் வழிமரபு

28. கிறிஸ்தவ ஒன்றிப்பின் வாரம் எது?

**விடை:** சனவரி 18 முதல் 25 வரை கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்.

29. திருச்சபையின் படிப்பினைகள் யாரிடமிருந்து வருகின்றன?
**விடை:** திருச்சபையின் படிப்பினைகள் அதன் தலைவரான திருத்தந்தையிடமிருந்து வருகின்றன.

30. திருச்சபையின் ஆசிரியம் என்றால் என்ன?
**விடை:** திருச்சபையின் அதிகாரப்பூர்வமான போதிக்கும் அலுவலை, அதாவது இறைவார்த்தைக்குப் பொருள் விளக்கம் தரும் பணியைத் திருச்சபையின் ஆசிரியம் என்றழைக்கிறோம்.

31. திருச்சபையின் ஆசிரியம் யாரிடமிருந்து வருகிறது?
**விடை:** திருச்சபையின் ஆசிரியம் கிறிஸ்துவிடமிருந்தும் அவரின் வழித்தோன்றல்களான அப்போஸ்தலர்களின் திருத்தந்தை மற்றும் ஆயர்கள் வழியாகவும் வருகிறது.

32. தொடக்கத் திருச்சபையில் வேத கலாபனை எப்போது எந்த மன்னர் காலத்தில் ஏற்பட்டது?
**விடை:** கி.பி.64முதல் 68வரை நீரோ மன்னர் காலத்தில் ஏற்பட்டது.

33. திருச்சபையின் உருவகங்கள் யாவை?
**விடை:** ஆட்டுமந்தை, ஆட்டுக்கொட்டில், நிலம், கட்டிடம், மணமகள், கிறிஸ்துவின் மறையுடல்.

34. ஆத் லிமினா அப்போஸ்தலோரும் (Ad Limina Apostolorum) என்றால் என்ன?
**விடை:** திருச்சபையின் அனைத்துலக ஆயர்களும் மண்டல

வாரியாக 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தந்தையைச் சந்திப்பது திருச்சபையின் வழக்கம் இது ஆத் லிமினா அப்போஸ்தலரும் என்று பொருள்.

35. திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் 12ஆம் ஆயர் பொதுப்பேரவையின் செய்தியாக வெளியிட்ட திருத்தூது அறிவுரை மடல் எது?

**விடை:** ஆண்டவரின் அருள் வாக்கு (Verbum Domini 30 September 2010)

36. திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் 2012 நவம்பர் 11ஆம் நாளிலிருந்து ஒரு ஆண்டை விசுவாசத்தின் ஆண்டாக அறிவிக்க காரணம் என்ன?

**விடை:** அ) 2 ஆம் வத்திக்கான் பொதுச்சங்கம் தொடங்கி 50–ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு 11.10.2012 முதல் கிறிஸ்து அரசர் பெருவிழா 24.11.2013 வரை விசுவாசத்தின் ஆண்டாக அறிவித்துள்ளது.

ஆ) அருளாளர் 2ஆம் ஜான்பால் கத்தோலிக்க மறைக்கல்வி (Catechism Of the Catholic Church) என்ற ஏட்டை வெளியிட்டதின் 20ஆம் ஆண்டு நிறைவை அக்டோபர் 11ஆம் நாள் சிறப்பிக்கின்றது. இந்த ஏடு இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கனி.

37. 2012 அக்டோபரில் நடைபெறும் அனைத்துலக ஆயர் பேரவையின் மையப்பொருள் யாது?

**விடை:** கிறிஸ்தவ விசுவாசத்தைப் பரப்ப புதிய நற்செய்தி அறிவிப்பு (The New Evangelization Transmission of the Christian Faith)

38. திருச்சபை பாரம்பரியத்தை அறிந்து கொள்வதற்கான வழிமுறைகள் யாவை?

**விடை:** சங்க ஏடுகள், புனிதர்களின் வாழ்க்கை வரலாறு, வழிபாட்டு முறை, திருச்சபையை வழிநடத்தி வந்த திருத்தந்தையர்களின் சுற்றுமடல்கள் மற்றும் கொள்கைப் பிரகடனம் ஆகியவை.

39. திருத்தந்தை 16–ஆம் பெனடிக்ட் அவர்களின் அப்போஸ்தலிக்க அறிவுரை சுற்று மடல்கள் யாவை?

**விடை:** 1. அன்பே கடவுள் ( Deus Caritas Est) 5.12.2005

2. கிறிஸ்தவ எதிர் நோக்கு 2007

3. முழு மனித வளர்ச்சியில் உண்மையும் பிறரன்பும் 16.6.2009

# மரியாள்

**40.** மரியாளின் நாமே அமல உற்பவம் விசுவாச கோட்பாடாக எப்போது யாரால் அறிவிக்கப்பட்டது?
**விடை:** 1854ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் நாள் 9ஆம் பத்திநாதர் என்ற திருத்தந்தையால் அறிவிக்கப்பட்டது.

**41.** மரியாள் கடவுளின் தாய் என்று எப்போது எந்த சங்கம் அறிவித்தது?
**விடை:** எபேசு பொதுச்சங்கம் கி.பி.431ல் அறிவித்தது.

**42.** அன்னை மரியாள் ஆன்ம உடலோடு விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்னும் மறையுண்மையை எப்போது யார் விசுவாச சத்தியமாக பிரகடனம் செய்தார்?
**விடை:** 1950ஆம் ஆண்டு 12ஆம் பத்திநாதர் மரியா ஆன்ம உடலோடு விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்னும் மறையுண்மையை விசுவாச சத்தியமாக பிரகடனம் செய்யப்பட்டது.

**43.** மாதா லூர்து நகரில் எப்போது யாருக்கு காட்சி கொடுத்தார்?
**விடை:** கி.பி. 1858–ஆம் ஆண்டு பிப்ரவரி 11ஆம் நாள் பெர்னதத் என்ற சிறுமிக்குக் காட்சி கொடுத்தார்.

**44.** லூர்து நகரில் காட்சி கொடுத்த அன்னை தம் பெயரை என்ன என்று வெளிப்படுத்தினார்கள்?
**விடை:** "நாமே அமல உற்பவம்"

**45.** பாத்திமா அன்னை யார் யாருக்கு எப்போது காட்சி கொடுத்தார்கள்? அக்காட்சியில் அவர்கள் வலியுறுத்தும் கருத்து யாது?
**விடை:** ஜெசிந்தா, பிரான்சிஸ், லூசியா. கி.பி. 1917–ஆம் ஆண்டு
செபம், தவம், மனமாற்றம்

**46.** மரியாள் வணக்கம் பற்றி திருச்சபையின் போதனை என்ன?
**விடை:** கடவுளுக்கு ஆராதனையும், புனிதர்களுக்கு வணக்கமும், மரியாவுக்கு மேலான வணக்கமும் செலுத்த வேண்டுமென்பதே திருச்சபையின் போதனை.

**47.** ஜெபமாலை அன்னை திருவிழா எப்போது யாரால் கொண்டாட அனுமதிக்கப்பட்து?
**விடை:** கி.பி. 1571 அக்டோபர் 7–ஆம் நாள் திருத்தந்தை 5–ஆம் பத்திநாதர் ஜெபமாலை அன்னையின் திருவிழாவை அனுமதித்தார்.

48. ஒளியின் தேவ இரகசியத்தை அறிமுகப்படுத்திய திருத்தந்தை யார்?
**விடை:** திருத்தந்தை 2–ஆம் ஜான்பால் கன்னிமரியின் ஜெபமாலை என்னும் சுற்றுமடலை எழுதி பிறமறை உண்மைகளோடு இணைத்தார்.

49. அன்னை மரியாவின் பெற்றோர் பெயர் என்ன?
**விடை:** புனித சுவக்கீன், புனித அன்னமாள்.

50. மிகவும் இரக்கமுள்ள தாயே என்ற செபத்தை எழுதியவர் யார்?
**விடை:** புனித பெர்னார்டு

## மறைக்கல்வி

51. கிறிஸ்துமஸ் குடில் அமைக்கும் பழக்கத்தை யார் எங்கு உருவாக்கினார்?
**விடை:** புனித பிரான்சிஸ் அசிசியார் 1223– ஆம் ஆண்டு கிரீசியோ நகரில் உருவாக்கினார்.

52. கிறிஸ்துமஸ் மரம் வைக்கும் பழக்கம் எங்கு உருவானது?
**விடை:** ஜெர்மனியில் 13–ஆம் நூற்றாண்டில்

53. கிறிஸ்துமஸ் மரம் எதைக் குறிக்கிறது?
**விடை:** ஏதேன் தோட்டத்து வாழ்வின் மரம், கல்வாரி சிலுவை மரம்.

54. கிறிஸ்துமஸ் செய்தி முதலில் வானொலியில் ஒலிபரப்பிய நாடு எது?
**விடை:** இங்கிலாந்து

55. கிறிஸ்துமஸ் தாத்தாவின் பெயர் என்ன?
**விடை:** புனித நிக்கோலாஸ்

56. இயேசுவை நீதியின் சூரியன் என்று கூறிய புனிதர் யார்?
**விடை:** புனித ஜான் கிறிஸ்தோஸ்தோம்

57. மெசியாவின் பிறப்பிடம் பெத்லகேம் என்று கூறிய இறைவாக்கினர் யார்?
**விடை:** மீக்கா (மீக்கா 5:2)

58. இயேசு பிறந்த போது யூதேயாவில் அரசனாக இருந்தவர் யார்?
**விடை:** ஏரோது (மத் 2:1)

59. யாக்கோபிலிருந்து ஒரு விண்மீன் உதிக்கும் என்று இயேசுவைப் பற்றி எங்கு கூறப்பட்டிருக்கிறது?
**விடை:** எண்ணாகமம் 24:17

60. கன்னி கருவுற்று ஒரு மகனைப் பெறுவார் என்று கூறிய இறைவாக்கினர் யார்?

**விடை:** எசாயா 7:14

61. இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து கானான் செல்லும் வரை அனுபவித்த இறை அனுபவ நிகழ்வுகள் யாவை?

**விடை:** செங்கடல் பிரிதல், யோர்தானைக் கடத்தல், எரிக்கோவைத் தகர்த்தல், நீர், காடை, மன்னா, நெருப்புத்தூண், மேகத்தூண்.

62. அதிதூதர்கள் மூவர் யார்? அவர்களின் பெயர், பெயர்களின் பொருள் என்ன?

**விடை:** புனித மிக்கேல், புனித கபிரியேல், புனித ரபாயேல்

புனித மிக்கேல் – இறைவனுக்கு இணை யார்?

புனித கபிரியேல் – இறைவனின் சக்தி (கடவுளின் பலம் தானி 8:18)

புனித ரபாயேல் – கடவுள் குணப்படுத்துகிறார் (தோபித்து 12:15)

63. இந்திய துறவிகளைப் போல் உடை அணிந்து மக்களை மனம் திருப்பியவர் யார்?

**விடை:** தத்துவ போதகர் என்று அழைக்கப்படும் இயேசு சபை குரு இராபர்ட் தே நோபிலி.

64. இந்தியாவில் கிறிஸ்தவம் வளர உழைத்தவர்கள் யார்? யார்?

**விடை:** புனித தோமையார்

புனித சவேரியார் கி.பி.1542 மே 6–ல் இந்தியாவிற்கு வந்தார்

புனித அருளானந்தர் கி.பி.1673 – 1693 பிப்ரவரி 4

குரு பெஸ்கி வீரமாமுனிவர் – பாரிஸ் வேத போதக சபை

65. மறைக்கல்வி ஆண்டின் விருது வாக்கு என்ன?

**விடை: 2011–2012 :** எல்லாருக்கும் மறைக்கல்வி

66. மீட்புச் செய்தியைக் கொண்டு வந்த வானதூதன் யார்?

**விடை:** புனித கபிரியேல்

67. திருமுழுக்கு யோவானுக்கும், இயேசுவுக்கும் வயது வித்தியாசம் என்ன?

**விடை:** 6 மாதம்

68. இயேசுவின் பிறப்புச்செய்தி முதலில் யாருக்கு அறிவிக்கப்பட்டது?

**விடை:** இடையர்களுக்கு

69. கல்வாரி பாதையில் இயேசுவுக்கு ஆறுதலாக இருந்தவர்கள் யார்?

**விடை:** அன்னை மரியா, சிமியோன், வெரோணிக்கா, யூத பெண்கள், யோவான்.

70. பரிசுத்த ஆவியின் அடையாளங்கள் யாவை?

**விடை:** புறா, தண்ணீர், நெருப்பு, மென்காற்று.

71. புனித பேதுருவின் சின்னங்கள் யாவை?

**விடை:** இரண்டு திறவு கோலே பேதுருவின் சின்னம். மேலும் சிறப்பாக மீன், சேவல், சிலுவை.

72. இந்தியாவில் முதல் மறைக்கல்வி மையம் யாது?

**விடை:** திண்டிவனம் முப்பணி நிலையம் (திருவழிபாடு, திருவிவிலியம், மறைக்கல்வி)

73. தமிழகத்தின் மறைக்கல்வியின் முன்னோடி என்று அழைக்கப்படுபவர் யார்?

**விடை:** அருட்தந்தை தாமஸ் டஃபி கவான் MEP

74. நான்கு நற்செய்தியாளர்களின் அடையாளங்கள் யாவை?

**விடை:** மத்தேயு– மனித முகம்

மாற்கு – சிங்க முகம்

லூக்கா – எருது முகம்

யோவான் – கழுகு முகம்

**மத்தேயு :** மனிதமுகம் கொண்ட நற்செய்தியாளர் புனித மத்தேயுவைக் குறிக்கிறது. ஏனெனில் அவர் தம் நற்செய்தியை மீட்பரின் மனித தலைமுறையோடு தொடங்குகிறார்.

**மாற்கு :** பாலைவனத்தில் வசிக்கும் சிங்கம் நற்செய்தியாளர் மாற்குவைக் குறிக்கிறது. அவர் தமது நற்செய்தியை புனித திருமுழுக்கு யோவான் பாலைவனத்தில் முழங்கும் ஒருவருடைய குரலை விவரித்து தொடங்குகிறார்.

**லூக்கா :** பலியாகும் எருது நற்செய்தியாளர் லூக்காவின் அடையாளம். அவருடைய நற்செய்தி குரு சக்கரியாவின் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு துவங்குகிறது.

**யோவான் :** வான் உயர பறக்கும் கழுகு நற்செய்தியாளர் புனித யோவானுக்கு அடையாளம். அவர் தன்னுடைய நற்செய்தியை தொடக்கவார்த்தைகளால் நம்மை வானுலகத்திற்கே அழைத்துச் செல்கிறார். (தொடக்கத்தில் வாக்கு இருந்தது)

75. 2011 – 2012ஆம் ஆண்டை மறைக்கல்வி ஆண்டாகக் கொண்டாட காரணங்கள் யாவை?

**விடை:** மறைக்கல்வியின் முன்னோடி என்று அழைக்கப்படும் அருட்தந்தை தாமஸ் டஃபி கவான் இந்தியாவிற்கு வந்து 100ஆண்டுகள் ஆகின்றன. (15.1.1912 – 2012)தமிழக முப்பணி நிலையம் தொடங்க தீர்மானித்து 50 ஆண்டுகள். புதிய தேசிய மறைக்கல்வியின் வழிகாட்டி நூலை (National Catachetical Directory) வெளியிடப்படுகிறது.

# ஆயர்கள், குருக்கள்

76. ஆயர்களின் பணிக்காலம் எப்போது நிறைவுபெறும்?
**விடை:** 75 வயதில் முடிவு பெறும்.

77. ஆயர்கள் மற்றும் கர்தினால்மார்கள் அணியும் மோதிரத்தின் அடையாளம் என்ன?
**விடை:** ஆயரின் அதிகாரத்தின் அடையாளமாக விளங்குகின்றது.

78. ஆயரின் செங்கோல் (Crosier) எதனை உணர்த்துகிறது?
**விடை:** இறைமக்களை ஆட்சி செய்வதற்கும், வழிநடத்துவதற்கும் பெற்ற அதிகாரத்தின் அடையாளமாக ஆயரின் செங்கோல் விளங்குகிறது.

79. குருக்கள் அணியும் தோள்துகில் (Stole) என்பதன் அடையாளம் யாது?
**விடை:** கிறிஸ்து கற்றூணில் கட்டி அடிக்கப்படும் போது பயன்படுத்தப்பட்ட பட்டையை நினைவுப்படுத்துகிறது. குரு இறைவனின் ஊழியன் என்பதை உணர்ந்து பொறுமையை கடைபிடிக்க வேண்டியதன் அடையாளமாகவும் இது விளங்குகின்றது.

80. 1986ஆம் ஆண்டு பிப்ரவரி 5ஆம் நாள் சென்னைக்கு வருகை தந்த திருத்தந்தை யார்?
**விடை:** 2ஆம் அருள் சின்னப்பர்

81. திருத்தந்தையின் இந்திய தூதரகம் எங்குள்ளது? தற்போதைய தூதர் யார்?
**விடை:** திருத்தந்தை இந்திய தூதரகம் புதுடில்லியில் உள்ளது. தற்போதைய இந்திய தூதுவர் சால்வாத்தூர் பெனாக்கியோ.

82. குருக்கள் நற்செய்தி வாசிக்கும் முன் எத்தனை முறை சிலுவை அடையாளம் வரைகிறார்கள், அதன் பொருள் என்ன?
**விடை:** குரு/திருத்தொண்டர் நான்கு முறை சிலுவை அடையாளம் வரைகிறார்கள். நற்செய்தி நூல், நெற்றி, உதடு, இதயம்.
நற்செய்தி நம் எண்ணங்களையும், வார்த்தைகளையும், விருப்பங்களையும் ஊடுருவிப் போகிறது

83. ஆயர் பேரவை என்றால் என்ன?

**விடை:** இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை திருச்சபையின் வாழ்வில் வளர்ச்சியில் தொடர்புடைய பொருள் பற்றி விவாதிக்க உலகனைத்திலுமிருந்து தேர்ந்தெடுக்கடுக்கப்பட்ட ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகியோர் அழைக்கப்பட்டு, ஒன்று கூடி குறிப்பிட்ட பொருள் பற்றி ஆராய்கிறது இந்த ஆயர் பேரவை.

84. 2005– ஆம் ஆண்டு நடந்த 11–ஆவது பேரவை எந்த பொருள் பற்றி ஆராய்ந்தது?

**விடை:** திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் நற்கருணை.

85. 2008 ஆம் ஆண்டு நடந்த 12–ஆவது ஆயர் பேரவை எந்த பொருள் பற்றி ஆராய்ந்தது?

**விடை:** மறைக்கல்வி நற்கருணை

86. குருக்களின் (பங்குத்தந்தையின்) பாதுகாவலர் யார்?

**விடை:** புனித ஜான் மரி வியான்னி

87. குருத்துவத்தின் படி நிலைகள் யாவை?

**விடை:** 1. திருத்தொண்டர், 2. குரு, 3. ஆயர்

88. குருத்துவத்தின் இரு நிலைகள் யாவை?

**விடை:** 1. பணிக்குருத்துவம், 2. பொதுக்குருத்துவம்

**பணிக்குருத்தவம்:** பெரிய வியாழன் அன்று முதல் திருப்பலியை நிறைவேற்றிய இயேசு அந்தத் திருப்பலியைத் தொடர்ந்து நிறைவேற்ற இதை என் நினைவாக செய்யுங்கள் என்று சொல்லி பணிக்குருத்துவத்தை ஏற்படுத்தினார். குருத்துவத்தில் முழுமையாக பங்குபெற்ற ஆயர்கள் குருத்துவ நிலையை ஏற்படுத்தி குருக்களுக்கு பணி குருத்துவத்தில் பங்களித்து வருகின்றனர்.

*இயேசுவின் முப்பெரும் பணிகள்* : போதிக்கும் பணி, புனிதப்படுத்தும் பணி, வழி நடத்தும் பணி.

**பொதுக்குருத்துவம்:** திருமுழுக்கு என்ற அருள்அடையாளத்தின் வழியாக இயேசு கிறிஸ்துவின் குருத்துவ நிலையில் பங்கு பெற அழைக்கின்றார். ஆகவே திருமுழுக்கு பெற்ற கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் இந்தப் பொதுக்குருத்துவத்தில் பங்கு பெறுகிறோம்.

# புனிதர்கள்

**89.** புனித தோமையார் எப்போது எங்கே கொல்லப்பட்டார்? அவருடைய திருயாத்திரைத் தலம் தமிழகத்தில் எங்குள்ளது?

**விடை:** புனித தோமையார் கி.பி. 72–ஆம் ஆண்டு ஜீலை 3–ஆம் நாள் சென்னை மயிலாப்பூரிலுள்ள தோமையார் மலை என்ற இடத்தில் பூசாரி ஒருவரால் ஈட்டியால் குத்திக் கொல்லப்பட்டார்.

*திருயாத்திரைத் தலம்* : சென்னை மயிலாப்பூரில் உள்ளது.

**90.** புனித பிரான்சிஸ்கு சவேரியார் மனம் திரும்ப காரணமாயிருந்த இறைவார்த்தை எது?

**விடை:** ஒருவர் உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில், அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? லூக் 9:25

**91.** தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு இறந்த திருத்தூதர் யார்?

**விடை:** புனித பேதுரு

**92.** இயற்கையை அன்பு செய்த புனிதர்கள் யாவர்?

**விடை:** புனித பிரான்சிஸ் அசிசியார், புனித வனத்து அந்தோணியார், புனித வனத்து சின்னப்பர்.

# அருட்சாதனங்கள்

**93.** கத்தோலிக்க திருச்சபையில் உள்ள அருள் அடையாளங்கள் எத்தனை? அவை யாவை?

**விடை:** அருள் அடையாளங்கள் ஏழு அவை 1. திருமுழுக்கு, 2. உறுதி பூசுதல், 3. நற்கருணை, 4. ஒப்புரவு, 5. நோயில் பூசுதல், 6. குருத்துவம், 7. திருமணம்.

**94.** ஒரு முறைக்கு மேல் வழங்கப்படாத அருள் அடையாளங்கள் எவை? ஏன்?

**விடை:** திருமுழுக்கு, உறுதி பூசுதல், குருத்துவம். இது ஒரு முறைக்கு மேல் வழங்கப்பட மாட்டாது. அவை கொண்டுள்ள அழிக்கப்படாத முத்திரையின் காரணமாக இந்த அருள் அடையாளம் வழங்கப்படாது.

95. புகுமுக அருள் அடையாளம் எது?
**விடை:** திருமுழுக்கு

96. சமூக அருள் அடையாளங்கள் யாவை?
**விடை:** குருத்துவம், திருமணம்

97. திருச்சபையில் திருமணத்திற்கு ஏற்ற வயது என்ன? (ஆண்,பெண்)
**விடை:** ஆண்– 21, பெண்– 18 வயதும் முடிந்திருக்க வேண்டும்.

98. திருச்சபையில் திருமணம் செய்ய விலக்கப்பட்ட (தடைசெய்யப்பட்ட) காலங்கள் எவை?
**விடை:** திருவருகைக்காலம், தவக்காலம்.

99. திருச்சபையில் திருமணம் செய்ய விக்கினமுள்ள உறவு முறைகள் எவை?
**விடை:** சொந்த அக்கா மகன், மகள்.
சித்தப்பா, பெரியப்பா(உடன் பிறந்தவர்கள்)

100. திருவழிபாட்டில் குருக்கள் எந்தெந்த காலங்களில் என்னென்ன வண்ண உடைகள் அணிகிறார்கள்?
**வெள்ளை, பொன்னிறம்:–** கிறிஸ்து பிறப்பு விழா, உயிர்ப்பு விழா, உருமாற்ற விழா
**ஊதா, ரோஸ்:–** தவ முயற்சிக்கும், மனமாற்றத்திற்கும் அழைப்பு விடுக்கிறது. திருவருகை காலம், தவக்காலம்
**சிவப்பு:–** ஆவியானவரின் நெருப்பு மயத்தையும், பாடுகள் மறைசாட்சியரின் வேதனைகளையும் நினைவூட்டுகிறது. மறைசாட்சியர் விழா.
**பச்சை:–** நம்பிக்கையின் சின்னம், ஆண்டின் பொதுக்காலம்



# மரியன்னையின் விழாக்கள்

## I. பெருவிழாக்கள் (SOLEMNITY)

1. **மரியா இறைவனின் அன்னை** – சனவரி 1
   கி.பி. 431ஆம் ஆண்டில் எபேசு பொதுச்சங்கம் கூறியது.
2. **மரியன்னையின் விண்ணேற்பு பெருவிழா** – ஆகஸ்ட் 15 (கடன் திருநாள்) 1950ஆம் ஆண்டு 12ஆம் பத்திநாதர் மரியா ஆன்ம உடலோடு விண்ணேற்பு அடைந்தார் என்னும் மறையுண்மையை திருச்சபையின் விசுவாச சத்தியமாக பிரகடனம் செய்தார்.
3. **மரியாவின் அமல உற்பவம்** – டிசம்பர் 8
   திருத்தந்தை 9ஆம் பத்திநாதர் 1854ஆம் ஆண்டு மேலை நாடுகளில் நிலவிய சமய பிளவை தீர்ப்பதற்காக இந்த விழாவினை தொடங்கினார்.

## II. விழாக்கள் (FEASTS)

1. **மரியன்னை எலிசபெத்தைச் சந்தித்தல்** – மே 31
   திருத்தந்தை 6ஆம் உர்பானுஸ் காலத்தில் கி.பி.1939ஆம் ஆண்டு மேலை நாடுகளில் இவ்விழாவைக் கொண்டாட தொடங்கினர்.
2. **மரின்னையின் பிறப்பு** – செப்டம்பர் 8
   கி.பி. 5ஆம் நூற்றாண்டில் புனித அன்னம்மாளின் இல்லம் இருந்த இடத்தில் எழுப்பப்பட்ட பேராலயத்தின் அபிஷேக நாளே மரியாவின் பிறந்த நாள் விழாவாக மாறியது.

## III. நினைவு நாட்கள் (MEMORIA)

1. **புனித கன்னிமரியாவின் ஆலய அர்ப்பணம்** –ஆகஸ்ட் 5
   எபேசு சங்கம் கி.பி. 431ஆம் ஆண்டு இயேசுவின் அன்னை இறைவனின் தாய் என்று அறிக்கையிட்டதைத் தொடர்ந்து 432–440 ஆண்டுகளில் திருத்தந்தை 3ஆம் சிக்ஸ்துஸ் உரோமையின் எஸ்குலைன் குன்றின் மீது பேராலயம் எழுப்பி, அன்னை மரியாவுக்கு நேர்த்தி செய்தார். இவ்வாலயம் புனித மரியாவின் மிக சிறந்த பேராலயம் என அழைக்கப்பட்டது. இது அன்னைக்கு இருக்கிற மிக பழமையான ஆலயமாகும். இத்திருநாள் உரோமை பட்டியலில் 1368ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டது. இஸ்ரயேல் மக்கள் அமைதியைத் தேடி ஆலயத்தை நாடிச்சென்றனர். ஆண்டவரது இல்லத்துக்குப் போவோம் எனத் திருப்பாடல் ஆசிரியர் 122:1ல் கூறுகிறார்.

2. **அரசியான கன்னி மரியா** – ஆகஸ்ட் 22

அன்னையின் விண்ணேற்பு அவருக்கு அரசிக்குரிய பெருமையைத் தருகிறது. (2ஆம் வத்.சங். தி.57) திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் ஏற்படுத்தினார்.

3. **வியாகுல அன்னை** – செப்டம்பர் 15

4. **செபமாலை அன்னை** – அக்டோபர் 7

கி.பி. 1571 ஆம் ஆண்டு பெல்கிராடுக்கருகில் லெ பான்றோ என்னுமிடத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் எதிரிகளை கடற்படைக் கொண்டு, செபமாலை செபித்து வெற்றிக் கொண்டார்கள். இந்த வெற்றியை நினைவு கூறும் வகையில் திருத்தந்தை 5ஆம் பத்திநாதர் 1573ஆம் ஆண்டு இவ்விழாவினை ஏற்படுத்தினார். செபமாலை நற்செய்தியின் சுருக்கம்.

5. **மரியாவின் அர்ப்பணம்** – நவம்பர் 21

கி.பி. 543 இல் மரியன்னைக்காக எருசலேம் தேவாலயத்திற்கு அருகில் ஓர் ஆலயம் கட்டப்பட்டது. இவ்வாலயத்தின் நினைவாக கொண்டாடப்படுகிறது. கி.பி. 1585 ஆம் ஆண்டு இத்திரு நாள் இரோமை பட்டியலில் இடம் பெற்றது.

IV. விருப்ப நினைவு (OPTIONAL MEMORIA)

1. **லூர்து அன்னை** – பிப்ரவரி 11

லூர்து நகரில் மசபியேல் என்னும் குகையில் 1858ஆம் ஆண்டு பிப்ரவரி 11ஆம் நாள் முதல் ஜீலை16ஆம் நாள் முடிய 18 முறை சுபீரஸ் பெர்னதத்துக்கு காட்சி அளித்தார். மரியா தன்னை அமல உற்பவம் என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

2. **மரியாயின் மாசற்ற திரு இருதயம்** – இயேசுவின் திரு இருதய விழாவுக்கு மறுநாள்

சிறுவன் இயேசுவைத் தேடி தேவாலயத்திற்கு வந்தபொழுது அங்கே அவர் சொன்ன வார்த்தைகளையும், நடந்த நிகழ்ச்சிகளையும் கண்ட மரியா, அதைப் புரிந்து கொள்ள முடியாத நேரத்தில் இந்நிகழ்ச்சிகளை எல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்தார். (லூக்.2:51) மரியா தூய ஆவியின் தூண்டுதலுக்கேற்ப முழு இதயத்தையே இறைவனுக்குக் கையளித்தார்.

3. **கார்மேல் மலை அன்னை** – ஜீலை 16

பாகாலின் இறைவாக்கினர் அனைவரும் போலி இறைவாக்கினர் எனவும் யாவே கடவுள் உண்மையானவர் என்றும் மெய்பித்த நிகழ்ச்சி கார்மேல் மலையிலே எலியா இறைவாக்கினர் காலத்தில் நடைபெற்றது. இந்த மலையில் 12ஆம் நூற்றாண்டில் வனத்துறவியர் சிலர் வாழ்ந்து ஒரு சபையையும் நிறுவினர்.

## திருப்பலியில் பயன்படுத்தப்படும் அருட்கருவிகள்

### ஆடைகள்
1. பூசை உடுப்பு (chausible)
2. நீண்ட வெள்ளாடை (Alb)
3. தோள்துகில் (Stole)
4. கயிறு (Cincture)
5. குறுகிய வெள்ளாடை (Surplice )
6. பீடச்சிறுவர்களின் உடுப்பு (Altar boys dress)
7. திருத்தொண்டர் உடுப்பு (Dalmatic )

### புத்தகங்கள்
1. பூசை புத்தகம் (Missal)
2. வாசகப் புத்தகங்கள் (Lectionary )
3. மந்திரிப்பு புத்தகங்கள் (Ritual Books )
4. விவிலியம் (Bible)

### பொருட்கள்
1. மெழுகுவர்த்தி (Candles )
2. சிலுவை ( Crucifix )
3. தூபக்கலசம் (Thurible)
4. சாம்பிராணி கலசம் (Boat)
5. அப்பத்தட்டு (Paten)
6. அப்பப்பாத்திரம் ( Ciborium)
7. இரசப் பாத்திரம் ( Chalice)
8. தண்ணீர், இரசம் வைக்கும் குப்பிகள் ( Cruets )
9. தீர்த்த செம்பு ( Sprinkler)
10. நன்மை தட்டு ( Communion Plate )

### ஆராதனை ஆடைகள்:
11. காப்பா ( Cope)
12. தோள் துகில் ( Humerel Veil )
13. கதிர் பாத்திரம் ( Monstrance )
14. நற்கருணை சிமிழ் ( Pyx)

# பீடப்பணியாளர்கள்

பீடப்பணியாளர்களின் பாதுகாவலர்–புனித பெர்க்மான்ஸ் அருளப்பர்

**"இந்த வயதில் நான் புனிதராகாவிட்டால் எப்பொழுதும் புனிதனாக முடியாது"**

**திருப்பலியின் போது பீடப்பணியாளர்கள் மணி ஒலிக்கும் நேரங்கள்**

- குரு கைகளை அப்பம் மற்றும் இரசக்கிண்ணத்தின் மீது விரித்து, சிலுவை அடையாளம் வரையும் போது,
- அப்பத்தை உயர்த்தி பிடிக்கும் போது
- இரசக்கிண்ணத்தை உயர்த்தி பிடிக்கும் போது
- இவர் வழியாக, இவரோடு இவரில் என்று குரு இரசக்கிண்ணத்தையும், அப்பத்தையும் உயர்த்தி பிடித்து பாடும்போது
- இதோ இறைவனின் செம்மறி என்ற செபத்தை குரு சொல்லி முடித்து, இயேசு கிறிஸ்துவின் திரு இரத்தத்தைப் பருகும் போதும்.

**திருப்பலியின் போது தூபமிடும் நேரங்கள்**

» நற்செய்தி வாசகத்திற்கு முன்

» அப்பத்தை உயர்த்தும் போதும்

» இரசக்கிண்ணத்தை உயர்த்தும் போதும்

» இவர் வழியாக இவரோடு, இவரில் என்று குரு பாடும் போதும் மும்முறை மூன்று அசைவுகளோடு.



# விழாக்கள்

சனவரி 1 மரியாள் இறைவனின் அன்னை
சனவரி 3 முத்.குரியாக்கோஸ் எலியாஸ் சாவரா
சனவரி 17 வனத்து அந்தோணியார்
சனவரி 20 புனித செபஸ்தியார்
சனவரி 21 புனித ஆக்னெஸ்
சனவரி 25 புனித பவுலின் மனமாற்றம்
சனவரி 28 தாமஸ் அக்குவினாஸ்
சனவரி 31 புனித தொன்போஸ்கோ

பிப்ரவரி 2 இயேசுவை கோவிலில் காணிக்கை
பிப்ரவரி 4 புனித அருளானந்தர்
பிப்ரவரி 11 புனித லூர்து அன்னை

மார்ச் 19 புனித வளனார்(சூசையப்பர்)
மார்ச் 24 புனித தோமினிக் சாவியோ
மார்ச் 25 கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு

ஏப்ரல் 16 புனித பெர்னதத்
ஏப்ரல் 25 புனித மாற்கு
ஏப்ரல் 26 புனித வெரோணிக்கா
ஏப்ரல் 29 புனித சியன்னா கத்தரின்

மே 1 தொழிலாளர் புனித சூசையப்பர்
மே 6 புனித தோமினிக் சாவியோ
மே 14 திருத்தூதர் மத்தியாஸ்
மே 22 புனித ரீத்தா
மே 30 ஜோன் ஆப் ஆர்க்
மே 31 அன்னை மரியாள் எலிசபெத்தம்மாளை சந்தித்த நாள்

ஜீன் 1 புனித ஜஸ்டின் மறைசாட்சி
ஜீன்13 புனித பதுவை அந்தோணியார்
ஜீன் 21 புனித அலோசியுஸ் கொன்சாகா
ஜீன் 22 புனித தாமஸ் மூர்
ஜீன் 24 ஸ்நாபக அருளப்பர் பிறப்பு விழா
ஜீன் 29 புனித இராயப்பர், சின்னப்பர்

ஜீலை 3 திருத்தூதர் புனித தோமா
ஜீலை 6 புனித மரிய கொரெற்றி
ஜீலை 11 புனித ஆசீர்வாதப்பர்
ஜீலை 15 புனித பொனவெந்தூர்
ஜீலை 16 புனித கார்மேல் அன்னை
ஜீலை 20 புனித அல்போன்சா
ஜீலை 22 புனித மரிய மதலேன்
ஜீலை 25 புனித யாக்கோபு
ஜீலை 26 சுவக்கீன் அன்னமாள்
ஜீலை 29 புனித மார்த்தா
ஜீலை 31 புனித லொயோலா இஞ்ஞாசியார்

ஆகஸ்ட் 1 புனித அல்போன்ஸ் லிகோரி
ஆகஸ்ட் 4 ஜான் மரி வியான்னி
ஆகஸ்ட் 6 ஆண்டவரின் உருமாற்றம்
ஆகஸ்ட் 10 புனித லாரன்ஸ்
ஆகஸ்ட் 11 புனித கிளாரா
ஆகஸ்ட் 13 புனித பெர்க்மான்ஸ் அருளப்பர்
ஆகஸ்ட் 15 புனித அன்னை மரியின் விண்ணேற்பு
ஆகஸ்ட் 20 புனித பெர்னார்து
ஆகஸ்ட் 21 புனித 10ஆம் பத்திநாதர்
ஆகஸ்ட் 22 அரசியான புனித கன்னிமரியாள்
ஆகஸ்ட் 23 புனித லீமா ரோஸ்
ஆகஸ்ட் 24 திருத்தூதர் பர்த்தலமேயு
ஆகஸ்ட் 25 புனித லூயிஸ்
ஆகஸ்ட் 27 புனித மோனிக்கா
ஆகஸ்ட் 28 புனித அகுஸ்தினார்
ஆகஸ்ட் 29 புனித ஸ்நாபக அருளப்பர் தலைவெட்டப்பட்ட நாள்

செப்டம்பர் 3 புனித பெரிய கிரகோரியார்
செப்டம்பர் 5 புனித அன்னை தெரசா
செப்டமபர் 8 புனித கன்னி மரியின் பிறப்பு
செப்டம்டபர் 10 புனித நிக்கோலாஸ்
செப்டம்பர் 13 கிறிஸ்தோஸ்தம் அருளப்பர்
செப்படம்பர் 14 திருச்சிலுவை உயர்த்தப்பட்ட நாள்
செப்டம்பர் 15 புனித வியாகுல அன்னை
செப்டம்பர் 19 புனித சலேத் அன்னை
செப்டம்பர் 21 புனித மத்தேயு
செப்டம்பர் 23 புனித தேக்ளா, புனித பியோ

செப்டம்பர் **24** புனித உபகார மாதா
செப்டம்பர் **26 –** புனித கோஸ்மாஸ் தமியான்
செப்டம்பர் **27** புனித வின்செென்ட் தே பவுல்
செப்டம்பர் **29** புனித மிக்கேல், கபிரியேல், இரபாயேல்
செப்டம்பர் **30** புனித எரோணிமுஸ்

அக்டோபர் **1** குழந்தை இயேசுவின் புனித தெரசாள்
அக்டோபர் **2** காவல் தூதர்கள்
அக்டோபர் **4** புனித பிரான்சிஸ் அசிசியார்
அக்டோபர் **5** புனித மரிய பவுஸ்தீனா கோவால்ஸ்கா
அக்டோபர் **7** புனித செபமாலை அன்னை
அக்டோபர் **15** புனித அவிலா தெரசாள்
அக்டோபர் **16** புனித மார்கரித் மரியா
அக்டோபர் **17** புனித அந்தியோக்கியா இஞ்ஞாசியார்
அக்டோபர் **18** புனித லூக்கா
அக்டோபர் **24** புனித அந்தோணி மரிய கிளாரட்
அக்டோபர் **28** புனித சீமோன், யூதா

நவம்பர் **1** புனிதர் அனைவரின் திருவிழா
நவம்பர் **2** இறந்த அனைத்து விசுவாசிகளின் நினைவு
நவம்பர் **11** புனித மார்டீன்
நவம்பர் **14** புனித ரோஸ்
நவம்பர் **17** ஹங்கேரி எலிசபெத்
நவம்பர் **21** அன்னை மரியாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள்
நவம்பர் **22** புனித செசிலி
நவம்பர் **25** புனித கேத்ரீன்
நவம்பர் **30** புனித பெலவேந்திரர்

டிசம்பர் **3** புனித சவேரியார்
டிசம்பர் **6** புனித நிக்கோலாஸ்
டிசம்பர் **7** புனித அம்புரோஸ்
டிசம்பர் **8** புனித கன்னி மரியின் அமலோற்பவம்
டிசம்பர் **11** தமாசுஸ்
டிசம்பர் **13** புனித லூசியா
டிசம்பர் **14** புனித சிலுவை அருளப்பர்
டிசம்பர் **25** கிறிஸ்து பிறப்புப் பெருவிழா
டிசம்பர் **26** புனித முடியப்பர்
டிசம்பர் **27** புனித அருளப்பர்
டிசம்பர் **28** மாசற்ற குழந்தைகள்
டிசம்பர் **30** திருக்குடும்ப விழா

## செபமாலை பேருண்மைகள்

செபமாலையில் நாம் கிறிஸ்துவின் பிறப்பு, பணிவாழ்வு, பாடுகள், உயிர்ப்பு போன்ற மறைநிகழ்ச்சிகளைத் தியானித்து செபிப்பதால் இவற்றை தேவ இரகசியங்கள் என்கிறோம்.

## செபமாலை நற்செய்தியின் சுருக்கம்

தேவ இரகசியங்கள் நான்கு வகை

1. மகிழ்ச்சி நிறை பேருண்மைகள்
2. ஒளிநிறை பேருண்மைகள்
3. துயர் நிறை பேருண்மைகள்
4. மகிமை நிறை பேருண்மைகள்

**1. மகிழ்ச்சி நிறை பேருண்மைகள் (Joyful Mystery)**

அ. கபிரியேல் சம்மனசு தேவ மாதாவுக்கு மங்களவார்த்தை சொன்னது (The Annunciation of Gabriel to Mary)

ஆ. தேவ மாதா எலிசபெத்தம்மாளை சந்தித்தது (The Visitation of Mary to Elizabeth)

இ. இயேசு பிறந்தது (The Birth of Jesus)

ஈ. இயேசுவை கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தது (The Presentation of Jesus in the Temple)

உ. பன்னிரண்டு வயதில் காணாமல்போன இயேசுவை கண்டடைந்தது (Finding Jesus in the Temple)

**2. ஒளிநிறை பேருண்மைகள்** (Luminous Mystery)

அ. யோர்தான் நதியில் இயேசுவின் திருமுழுக்கு (The baptism of Jesus in the river Jordan)

ஆ. கானாவூர் திருமணத்தில் இயேசு தண்ணீரை இரசமாக மாற்றுதல் (The wedding at Cana, Christ manifested)

இ. இறையரசு நெருங்கி விட்டது என்று இயேசு அறிவித்தல் (The proclamation of the Kingdom of God)

ஈ. தாபோர் மலையில் இயேசு உருமாறுதல் (The transfiguration of Jesus)

உ. இயேசு திவ்விய நற்கருணையை நிறுவியது (The last supper, the Holy Eucharist)

3. **துயர் நிறை பேருண்மைகள்** (Sorrowful Mystery)

அ. இயேசு பூங்காவனத்தில் இரத்த வியர்வை வியர்த்தது (Agony of Jesus in the garden)

ஆ. இயேசுவை கற்றூணில் கட்டியடித்தது (Jesus is scourged at the pillar)

இ. இயேசுவின் தலையில் முள்முடி சூட்டியது (Jesus is crowned with thorns)

ஈ. இயேசு சிலுவை சுமந்து சென்றது (Jesus carries His cross)

உ. இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்தது (The crucifixion of Jesus)

4. **மகிமை நிறை பேருண்மைகள்** (Glorious Mystery)


அ. இயேசு உயிர்த்தெழுந்தது (The Resurrection of Jesus)

ஆ. இயேசு பரலோகத்திற்கு எழுந்தருளியது (The Ascension of Jesus)

இ. பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள் மீதும் தேவமாதாவின் மீதும் எழுந்தருளி வந்தது (The Descent of the Holy Spirit)

ஈ. தேவமாதா உடலோடு பரலோகத்திற்கு எடுக்கப்பட்டது (The Assumption of Mary into Heaven)

உ. தேவமாதா விண்ணுக்கும் மண்ணுக்கும் அரசியாக முடி சூடப்பட்டது. (The Coronation of Mary as Queen of Heaven and Earth)



அன்பும் பலியும்

# இதயாலயா

மேலபுத்தமங்கலம்,
திருநள்ளார் ரோடு,
காரைக்கால் – 609 607
தொலைபேசி: 04368–236920